வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   25.11.2025 செவ்வாய்க்கிழமை   இதழ் : 329   பக்கங்கள் : 08

# நுகேகொடை கூட்டம் ஒரு செல்லாக் காசு!

**பிரதி அமைச்சர் நளின் ஹேவகே**

கொழும்பு, நவ. 25

நுகேகொடை கூட்டமானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் சவாலாக அமைய வில்லை என்று பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரி வித்தார்.


நுகேகொடையில் நடந்த கூட்டத்தால் அரசாங்கம் கதிகலங்கி நிற்கின்றது என கூட்டு எதிரணியினர் எனக் கூறிக்கொள்ளும் தரப்பு கூறிவரும் நிலையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

"நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்றிருந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்குகள் உள்ளன. இதற்கு

07

# இலங்கையில் பிரிவினைவாதத்தை கனேடிய அரசு அங்கீகரிக்கக்கூடாது!

## அந்நாட்டு தூதுவரிடம் கோரினார் விஜித ஹேரத்



கொழும்பு, நவ. 25

இலங்கையில் பிரிவினைவாத கொள்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை கனேடிய அரசு அங்கரிக்கக்கூடாது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் கத்ரீன் மார்ட்டினை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, இலங்கையில் பிரிவினைவாத கொள்கைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்களை அங்கீகரித்தல் மற்றும் இலங்கையில் உள்ள இன சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்த முற்படும் செயற்பாடுகள் ஆகியவற்றைத் தடுப்பதற்கான அவசியத்தை கனடிய அரசாங்கத்துக்கு எடுத்துரைக்குமாறு அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.

கனடாவில் உள்ள சில உள்ளூர் குழுக்களின் இத்தகைய செயற்பாடுகள், தேசிய ஒற்றுமையை

07

# அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்ற உதித் லொக்குபண்டாரவிடம் பிஸ்டல்!

**விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்**



கொழும்பு, நவ. 25

அரசாங்கத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் நுகேகொடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதித் லொக்குபண்டார கைத்துப்பாக்கியுடன் மேடையில் நின்றமை குறித்து விசாரணை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

மேற்படி கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

07

# றில்வின் சில்வாவுக்கு எதிராக லண்டன் நகரில் ஆர்ப்பாட்டம்!




லண்டன், நவ. 25

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் றில்வின் சில்வா பிரித்தானியாவுக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் அவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்புக்

07

# அரசுக்கு மருத்துவர் சங்கம் 48 மணிநேர கால அவகாசம்!

கொழும்பு, நவ. 25

வைத்தியர்கள் மற்றும் சுகாதாரக் கட்டமைப்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்பட்ட தீர்வுகளை அறிவிப்பதற்கு, பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு 48 மணிநேர கால அவகாசத்தை வழங்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

குறித்த 48 மணித்தியாலங்களுக்குள் தீர்வு வழங்கப்படாவிடின், நாளை நடைபெறவுள்ள சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தில் தொழிற்சங்க

07

# வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வெள்ள அனர்த்த எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 25

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் கனமான மழை இன்று முதல் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் தென் மேற்கிலும் தென்கிழக்கிலும் காணப்படும் காற்றுச் சுழற்சிகள் முறையே

07

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# ஹேமசிறி, பூஜித மீதான வழக்கு ஜனவரி மாதம் விசாரணைக்கு!

கொழும்பு, நவ. 25

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கை 2026 ஜனவரி 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை குற்றவியல் அலட்சியம் மற்றும் முன்கூட்டியே

07

# ரணில் வழக்கில் 50 பேரிடம் வாக்குமூலம் இன்று நாடு திரும்புகிறது பொலிஸ் குழு!

கொழும்பு, நவ. 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக பிரித்தானிய பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தபோது, 16.6 மில்லியன் ரூபா அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய தாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதுவரை 50 பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்,

07

# மோசமான வானிலை; பத்து பேர் உயிரிழப்பு!

## 1,790 பேர் பாதிப்பு

கொழும்பு, நவ. 25

நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக 10 மாவட்டங்களில் 504 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 1,790 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களில் வானிலை தொடர்பான அனர்த்தங்களினால் குறைந்தது 10 இறப்புகள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ

07

# வடக்கு எதிர்கொள்ளவுள்ள பாதிப்புகள் ஆளுநர் தலைமையில் நேற்று ஆராய்வு



யாழ்ப்பாணம், நவ. 25

எதிர்வரும் நாட்களில் ஏற்படவுள்ள அரிதானதும், ஆபத்துமிக்கதுமான வளிமண்டலக் குழப்பம் காரணமாக வடக்கு மாகாணம் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்ளக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில், இடர் பாதிப்புக்களைத் தணிப்பது

07

# வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றத்துக்காக அடுத்த ஆண்டில் 2500 வீடுகள் நிர்மாணம்!

கொழும்பு, நவ. 25

யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்தும் மீள்குடியேற்ற உட்கட்டமைப்பு வசதிகள் முழுமைப்பெறவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றத்துக்காக அடுத்த ஆண்டு 2500 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என வீடமைப்பு மற்றும் நீரிபாசனத்துறை அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவுமே இல்லாத பட்ஜெட் இது! விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 25

2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டில், சர்வதேச நாணய நிதியத்தின் பிடியிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை விடுவிப்பதற்கான எந்தவொரு திட்டமும் முன்வைக்கப்படவில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றம்சாட்டியுள்ளார்.

பாதீடு தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போது அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அத்துடன், நாட்டின் கையிருப்பு 2027ஆம் ஆண்டில் 15 மில்லியன் அமெரிக்க டொலராக இருக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்கும் போது, நாட்டின் பொருளாதாரம் 6.3 அமெரிக்க டொலராக இருந்த நிலையில், தற்போது 6.2 அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, சுற்றுலாத் துறையினூடாக மாத்திரம் இலாபத்தை ஈட்ட முடியாது எனவும் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பு பிரபல பாடசாலை மாணவன் போதை மாத்திரைகளுடன் யாழில் கைது!

## ஊரெழு மாணவர் ஒருவரும் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளுடன் கைதான கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை மாணவன் உள்ளிட்ட இரு மாணவர்களும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட போதை தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், வெளிமாவட்ட பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவரை பொலிஸார் தடுத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின்போது முன்னுக்கு பின் முரணான தகவல் வழங்கியதை அடுத்து இருவரையும் சோதனையிட்ட போது, அவர்களின் உடைமையில் இருந்து போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்த வேளை, ஒருவர் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை மாணவன் எனவும் மற்றையவர் ஊரெழு பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவன் எனவும் தெரிய வந்துள்ளது.

கொழும்பு மாணவனின் உடைமையில் இருந்து 1700 போதை மாத்திரைகளும், யாழ். மாணவனிடம் இருந்து 200 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டதாகவும், விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, இருவரையும் அச்சுவேலியில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கஜேந்திரகுமார் என்ன சொல்கிறாரோ அதே தரத்தில் அவர்களுக்கு இனி பதில்!

## சீ.வி.கே. சிவஞானம் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 25

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், செயலாளர் கஜேந்திரனும் சொல்வது போல தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யவில்லை. நியாயமான விமர்சனத்தை ஏற்கலாம். துரோகம், காட்டிக்கொடுப்பு, இனத் துரோகி என்ற வசனங்களை ஏற்கமுடியாது. இனி எந்தத் தரத்தில் பதில் வருகிறதோ அதே தரத்தில் பதில் கொடுக்கப்படும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி. வீ.கே.சிவஞானம், கூட்டுத் தலைமையாக பொது விடயங்களில் ஒன்றாகுவோம் என அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கூட்டாக செயற்பட எல்லாக் கட்சிகளுடனும் பேசினோம். எல்லோரின் வீடுகளுக்கும் தேடிப்போனேன். ஒருவரும் ஒத்துழைக்கவில்லை.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் மீளப் பெறமுடியாத அதிகாரப் பகிர்வில் சமஷ்டி கட்டமைப்பை கொண்ட - எந்த பெயரைக் கொண்ட தீர்வையும் நாம் ஏற்க தயார். ஒற்றையாட்சியை ஏற்கவுமில்லை. சமஷ்டியை கைவிடவுமில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கஜேந்திரனும் சொல்வதுபோல தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யவில்லை. கடல் வற்றும் கடல் வற்றும் என கொக்கு குடல் வற்றிப் போக முடியாது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தங்களுடன் பேசியிருக்கலாமே என்கிறார். மாகாண சபையை வேண்டாம் எனச் சொல்பவரை எவ்வாறு அழைத்துச் செல்ல முடியும்.

அரசியல் தீர்வை அடைந்த பின்னர் ஏனைய பிரச்னையை பார்க்கலாம் என்கிறார். அரசியல் தீர்வு வருவதற்குள் எல்லாம் முடிந்து விடும்.

இணைந்து செயற்படுவது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு அழைப்பு விடுத்தோம். அடுத்த மாத முற்பகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேசப் போகிறோம். அதை ஒத்த அழைப்பை கஜேந்திரகுமாருக்கும் வழங்கினோம்.

பொது விடயத்தில் அரசியலமைப்பும் வரும். மாகாண சபையும் வரும். கொச்சைப்படுத்தும் கருத்துக்களை சொல்ல வேண்டாம் என்றோம்.

கஜேந்திரகுமாருக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். அடக்கமாக பேசக் காரணம் ஒற்றுமையாகப் பயணிக்க விரும்புகிறோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்மை தொடர்ச்சியாக விமர்சிக்கமுடியாது. நியாயமான விமர்சனத்தை ஏற்கலாம். துரோகம், காட்டிக் கொடுப்பு, இனத்துரோகி என்ற வசனங்களே இவர்களுக்கு தெரியும். மக்களுக்கு பதில் சொல்ல நாம் தயார். சொல்லில் தொங்கி கொண்டு மக்களை ஏமாற்ற வேண்டாம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாகாண சபை வேண்டாம் என்று சொன்னால் நாம் ஒத்துப்போக முடியாது. கஜேந்திரகுமாருடன் சுமூகமான உறவை பேணவே விரும்புகிறோம்.

நீங்கள் அடிக்க வெளிக்கிட்டால் நாம் மென்மையாக திருப்பி அடிப்போம். எங்களுடைய வாக்கு வங்கி குறைந்து விட்டதுதான். ஏன் உங்கள் வாக்கு வங்கி குறையவில்லையா? எங்களை நீங்கள் தாக்கியதால் தான் தேசிய மக்கள் சக்தி வளர்ந்தது.

சமஷ்டியை கைவிடமாட்டோம் என ஜனாதிபதிக்கு முன்னாலேயே சொல்லி இருக்கிறோம். நான் இனி தேர்தல் கேட்கப் போவதில்லை. ஆனால் கட்சியில் கை வைத்தால் எந்த தரத்தில் பதில் வருகிறதோ அதே தரத்தில் பதில் கொடுக்கப்படும்-என்றார். (அ-05)

# விசுவமடுவில் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிப்பு



முல்லைத்தீவு, நவ. 25

மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர் பெற்றோர்கள் உரித்துடையோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு பிரதேசங்கள் ரீதியாக நடைபெற்று வருகின்றது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுமடு புத்தடி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமை பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் விசுவமடு மேற்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

விசுவமடு பிரதேசத்தை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மங்கள வாத்திய இசையுடன் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்துக்கு அழைத்து வரப்பட்டு பொதுச் சுடரை மூன்று மாவீரர்களின் சகோதரி புஷ்பராணி ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் பொது படத்துக்கு மாலை அணி வித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு மாவீரர் பெற்றோர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

விசுவமடு மேற்கு, கிழக்கு மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு ஏற்பாட்டு குழுவின் தலைவரும், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளருமான வேலாயுதம் கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் கு.அகிலன், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அஞ்சல் ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, நவ. 25

காட்டு யானைகள் அதிகம் உள்ள பகுதிகளில் சேவையில் ஈடுபடும் இரவு நேர அஞ்சல் ரயில் சாரதிகள், நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இரவு நேர ரயில் போக்குவரத்தின்போது, காட்டு யானைகள் அடிக்கடி மோதுகின்றன. எனினும் அரசாங்கம் இந்த பிரச்னைக்கு உரிய தீர்வு காணத் தவறிதாகக் தெரிவித்தே ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

காட்டு யானைகள் அதிகம் உள்ள பகுதிகளில் இயக்கப்படும் சரக்கு ரயில் மற்றும் எரிபொருள்கள் ரயில் சாரதிகளே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# ரில்வினுக்கு எதிராக போராட்டம் ஈ.பி.டி.பி. கட்சி கடும் கண்டனம்!

யாழ்ப்பாணம், நவ. 25

புலம்பெயர் தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் கோமா நிலையில் இருந்து மீண்டு யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள ஈ.பி.டி.பி., லண்டனில் ஜே.வி.பி. தலைவர்களுள் ஒருவரான ரின்வின் சில்வாவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடக செயலாளர் சிறீகாந் இந்த கண்டனத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விமர்சனங்களுக்கு அப்பால் கடந்த ஆயுத வழிமுறையில் ஈடுபட்டு பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த தரப்பு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருக்கின்றது.

குறித்த தரப்பு, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப் படவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றது. புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட போதிலும் அந்த அமைப்பு சார்பாக உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவு கூர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்கிறார்கள். அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக பரிசீலிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இவ்வாறான சூழலில் ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் எதிர் ப்பு தெரிவிக்கப்படுவதை அறிவு சார்ந்து சிந்திக்கின்ற யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

தற்போதைய சூழலில் இவ்வாறான செற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் கோமா நிலையில் இருக்கின்றார்களோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது-என்றார்.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
25.11.2023 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இலக்கற்ற எதிர்ப்புக்கள்?

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இங்கிலாந்து சென்றிருக்கின்றார். புலம்பெயர் தமிழ் குழுவொன்று அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகளை தாங்கியவாறு ஒரு குழுவினர் அவரது வாகனத்தை சூழ்ந்துகொள்வதான காட்சிகள் வெளியாகியிருந்தன. இதனை நோக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் விடுதலைப் புலிகள் அமைப்பினர் ரில்வின் சில்வாவிற்கு எதிர்ப்பு வெளியிட்டதாகவே புரிந்து கொள்வர்.

சிங்கள ஊடகங்கள் அவ்வாறுதான் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. ஆனால் அரசியல் மற்றும் சமூகப் பொறுப்புடன் கேட்கவேண்டிய கேள்வி - இவ்வாறான எதிர்ப்புக்களால் எதனை சாதித்துவிட முடியும்? இதுவரை காண்பிக்கப்பட்ட எதிர்ப்புக்கள் எதனையும் சாதிக்காத போது, அவற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளாமல் மீண்டும் இவ்வாறான சிறு குழு எதிர்ப்புக்களை காண்பிப்பதால் என்ன நடந்துவிடப் போகின்றது?

ரில்வின் சில்வா அதிகாரம்மிக்க பொறுப்புக்களை வகித்த ஒருவர் அல்லர். அதேவேளை தற்போதும் அவர் அரசாங்க பதவிகளில் இல்லை. ஜே.வி.பியின் செல்வாக்குமிக்க ஒரு மூத்த உறுப்பினர். அத்துடன் அதன் பொதுச் செயலாளர் என்பதைத் தவிர அவரிடம் எவ்வித பொறுப்புக்களும் இல்லை. ஆனால் ஜே.வி.பி ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்றிருக்கும் நிலையில் அவருடைய அரசியல் புரிதல்களை முன்வைத்து வருகின்றார். அவைகள் அனைத்தும் ஏற்புடையவை அல்ல. மாறாக விமர்சத்திற்குரிய விடயங்கள் பல உண்டு. ஆனால் அவற்றை ஜனநாயக ரீதியில் நாம் எதிர்கொள்ளலாம். அதில் பிரச்னையில்லை. ஆனால் எதிரி மனோபாவத்தில் விடயங்களை கையாள முற்பட்டால் அரசாங்கத்துடன் ஊடாடுவதற்கான இடைவெளிதான் சுருங்கிக்கொண்டு செல்லும்.

அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் கலை - ஆனால் சாத்தியங்களை கையாள வேண்டுமாயின், அரசாங்கத்துடன் பேசுவதற்கான வாய்ப்பை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும். ஐரோப்பிய வீதிகளில் என்னதான் கொடிகளுடன் வலம் வந்தாலும் கூட, இறுதியில் பிரச்னைக்கான தீர்வு - அது எதுவாக இருப்பினும் - கொழும்பின் ஆட்சியாளர்களுடன்தான் பேசியாக வேண்டும். கடந்த 16 வருடகால அரசியல் அனுபவங்கள் அதனைத் தெளிவாக உணர்த்திய பின்னரும் கூட, எதனையும் நம்மால் கற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது என்றால், கற்றுக்கொள்ளும் எண்ணத்தோடு எவரும் இல்லை என்பதுதான் இப்போது தமிழ் சமூகத்தின் பிரதான அரசியல் பிரச்னையாகும். சதா கற்றுக்கொண்டு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை தகவமைத்துக்கொள்ள முடியாதவர்களிடம் என்ன ஆற்றல் இருந்தும் பயனில்லை. அவ்வாறான அரசியல் தலைமைகளால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காது.

ரணில்-மைத்திரி காலத்தில், வர முடியாத அரசியல் யாப்பு பற்றிப் பேசி, காலத்தை விரயம் செய்தனர். அவ்வாறாயின் ஒரு விடயத்தை நம்புவது தவறா என்று ஒரு கேள்வி குறுக்கிடலாம் - நிச்சயமாக தவறில்லை - ஆனால், நாம் நம்பும் விடயம் தோல்வியில் முடிவுறுகின்றபோது, அதனை அடைவதற்கான சொந்த பலம் நம்மிடம் இல்லை - நமக்கான இரவல் ஆதரவும் இல்லையென்று தெரிந்த பின்னரும் கூட, குறித்த விடயம் தொடர்பில் நம்புவதுதான் தவறானது. இன்றைய சூழலில் என்ன செய்யலாமோ அதனைச் செய்வதற்கு முயற்சிப்பது தான் அரசியல் ரீதியில் முதிர்ச்சியானது.

எந்தக் காலத்தில் எதைச் செய்வது சரியானது என்பதை அறிந்து செய்யும் அரசியல்தான் அறிவுபூர்வமான அரசியல். மற்றையது அனைத்தும் உணர்வுபூர்வமான அரசியல். உணர்வுபூர்வமான அரசியல் தமிழ் மக்களுக்கு எதனையும் இதுவரையில் பெற்றுக்கொடுக்கவில்லை. ஜே.வி.பியின் இன்றைய அரசியல் முகம் என்பது அவர்களுடைய அரசியல் நகர்வில் ஒரு வளர்ச்சி. அதற்காக அவர்கள் சிங்கள-பௌத்த கட்டமைப்பை ஒரு இரவில் கடந்துவிட முடியுமென்று எண்ணினால் அதுவும் தவறானது. ஆனால் விரும்பியோ விரும்பாமலோ அவர்களுடன் நாம் உரையாட வேண்டியிருக்கின்றது. ஒருவேளை அவர்கள் ஆட்சியில் இல்லாவிட்டாலும் கூட தென்னிலங்கையில் ஒரு பிரதான அரசியல் சக்தியாக இருக்கக் கூடியளவிற்கு அவர்கள் வளர்ந்திருக்கின்றனர். அரசியலை வெறுமனே கறுப்பு வெள்ளையாக புரிந்து கொள்ளும் பழைய பார்வைகள் இனி உதவாது என்பதை தமிழ் அரசியல் தரப்புக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

## வட மாகாண மர நடுகை மாதம்
## கார்த்திகை - 2025

“குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்.”

- வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)



# ஓய்வு பெற்ற நீதிபதி உட்பட பலரை ஏமாற்றி சர்வதேச ஒன்லைன் மோசடி!

## மோசடியாளர்கள் பயன்படுத்தும் யுக்தி

கொழும்பு, நவ. 25

இலங்கையின் அஞ்சல் திணைக்களத்தின் பெயரில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வரும் சர்வதேச ஒன்லைன் மோசடி கும்பலினால், அண்மையில் ஓய்வுபெற்ற இலங்கை நீதிபதி ஒருவர் உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் நீதிபதி தனது வங்கிக் கணக்கிலிருந்து சுமார் 400,000 ரூபாவை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் தங்களை அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் எனக் கூறி, நீதிபதியின் வங்கிக் கணக்கில் அத்துமீறி நுழைந்து, ஒரு பொதிக்கான கட்டணத்தைச் செலுத்தும்படி அவரைத் தூண்டியுள்ளனர்.

விசாரணைகளின்படி, மோசடி செய்பவர்கள் ஒரு பொதி வந்துள்ளதாகவும், அதற்கான சிறிய கட்டணமாக (பொதுவாக ரூ. 100 இற்கும் குறைவான தொகை) ஒரு ஒன்லைன் கட்டண இணைப்பின் மூலம் பணம் செலுத்துமாறும் கூறி, குறுஞ் செய்திகளை அனுப்புகின்றனர்.

பாதிக்கப்பட்டவர் தமது வங்கிக் கணக்கு விவரங்களை இணைப்பில் உள்ளிட்டவுடன், மோசடி செய்பவர்கள் அங்கீகாரமற்ற முறையில் கணக்குக்குள் நுழைந்து, திருடிய பணத்தை வெளிநாட்டு நாணயமாக மாற்றிக் கொள்கின்றனர்.

இந்த மோசடி வேகமாக விரிவடைந்து வருவதாகவும், பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றுவதற்காகப் பிரபல உள்ளூர் வணிகப் பெயர்களைப் பயன்படுத்துவதாகவும் அஞ்சல் திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவின் பிரதி பணிப்பாளர் சாம்லி விஜயபால எச்சரித் துள்ளார்.

அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், சிங்கப்பூர் டொலர், சுவிஸ் பிராங்க் மற்றும் பிரிட்டிஷ் பவுண்டுகள் போன்ற உயர் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்களில் இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பல முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மோசடி செய்பவர்கள் உத்தியோகபூர்வ அஞ்சல் திணைக்களப் பக்கத்தை ஒத்த போலி இணையத்தளங்களையும் உருவாக்கி, அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைச் செய்ய ஓ.ரி.பி. குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர்.

பாதிக்கப்பட்ட முன்னாள் நீதிபதி இது தொடர்பாக மருதானை அஞ்சல் அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வருவதாகவும், ஆனால் அவர்களின் அடையாளங்கள் இன்னும் தெரியவில்லை என்றும் அஞ்சல் மா அதிபர் ருவான் சத் குமார தெரிவித்துள்ளார்.

அஞ்சல் திணைக்களம் கடன் அட்டை அல்லது பற்று அட்டை மூலம் எந்தவிதமான ஒன்லைன் கட்டணங்களையும் ஆதரிப்பதில்லை என்றும், அஞ்சல் சேவைகளுடன் தொடர்பு பட்டதாகக் கூறி மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைகளையும் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அஞ்சல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

இந்த மோசடி ஒரு தனி நபரால் நடத்தப்படுகிறதா அல்லது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேசக் குழுவால் நடத்தப்படுகிறதா என்பதை இன்னும் தீர்மானிக்க முடியவில்லை என அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் கைது!


கொழும்பு, நவ. 25

தனமல்வில, படுவேவ பகுதியில் சட்டவிரோதமாக தொல்பொருட்கள் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோத நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட பல அகழ்வாராய்ச்சி கருவிகளும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் சூரியாரவைச் சேர்ந்த 52 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

நவம்பர் - 25 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - கார்த்திகை 09
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பஞ்சமி

**மேடம்**
புதிய பாதையில் பயணிக்க தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டே யிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப் பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டும்.

**கும்பம்**
சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சிறப்பான நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

# வடக்கில் நீண்ட காலம் அபிவிருத்தி இல்லை

## யாழில் அமைச்சர் சுனில் குமார

யாழ்ப்பாணம், நவ. 25

வடக்கில் நீண்ட காலமாக அபிவிருத்தி நடக்கவில்லை. இங்கிருந்தவர்கள் வாக்குகளை பெற்று தங்கள் வேலைகளை மட்டுமே செய்தார்கள் என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் புதிய உள்ளக விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த கோரிக்கையால் இதனை நாம் செய்யவில்லை. நாமாக உணர்ந்து இதனை செய்துள்ளோம்.

அமைச்சராக நான் முதன் முதலாக பயணத்தை மேற்கொண்டது யாழ்ப்பாணத்துக்கு தான். அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்துக்கு என்ன தேவை என தீர்மானித்தோம். என்னுடைய சொந்த மாவட்டம் காலி.

அமைச்சராக இன்னமும் அந்த மாவட்டத்துக்கு போகவில்லை.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த நாம் முயற்சிக்கிறோம். எமக்கு அதிகாரம் தொலைவில் இருந்தபோதும் நாம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தோம். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்பதல்ல

பிரச்னை. மனிதராக ஒன்றாக இருக்க வேண்டும்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆயிரம் தடவை யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பார். 2013 ஆம் ஆண்டு முதல் அவர் இங்கு வந்து செயல்படுகிறார்.

எனவே, வாக்குகளுக்கவோ அரசியல் தந்திரத்துக்காகவோ இதனை நாம் செய்யவில்லை.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனி செயல்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட அதிக நிதியாக உள்ளக விளையாட்டு அரங்கிற்கு நிதி ஒதுக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான நிதியில் 170 மில்லியன் ரூபாயும் 2026ஆம் ஆண்டுக்கான நிதியில் 200 மில்லியனும் இந்த உள்ளக விளையாட்டு அரங்குக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வலைப்பந்து, கைப்பந்து, பூப்பந்து, கபடி, மேசைப்பந்து, கரம் என பல விளையாட்டுகளை இங்கு விளையாட முடியும்.

விளையாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம், யாழ்ப்பாணம், காலி என நாம் பார்ப்பதில்லை. திறமையான பிள்ளைகளை பார்க்கிறோம். இங்கு பல திறமையானவர்கள் உள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல வருடங்களாக பயன்பாடில்லாமல் நீச்சல் தடாகம் உள்ளது. அதற்காக 30 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்லோரும் பாவிக்கும் வகையில் அது அமைந்தால் அது பயனாக இருக்கும்.

மாணவர்களுக்கு உடற்பயிற்சி, பெரியோருக்கு நடைபயிற்சி செய்ய சிறுவர் பூங்கா தேவை. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இடத்தை வழங்கினால் நல்ல பூங்காவை அமைக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மூன்று மாதங்களுக்குப் பின்னர் இதன் முன்னேற்றத்தை பார்க்க வருவோம். அந்த நேரத்தில் என்னென்ன தேவை என்பதை ஆராய்வோம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உதைபந்தாட்டம் உள்ளிட்ட விளையாட்டுத் துறை சார்ந்து பல வேலைத்திட்டங்களை நாம் செய்வோம் - என்றார். (எ-03)

# சமஷ்டி அதிகார பகிர்வு குறித்து யாழில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 25

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்திய கலந்துரையாடல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த செயல்பாட்டின் அடிப்படையில் இந்த வருடமும் நூறு நாட்கள் விழிப்புணர்வு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த செயல்முறையின் இறுதி நாள் நிகழ்வாக குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது சமஷ்டி முறையை பயன்படுத்துவதன் ஊடாக மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும், ஒற்றையாட்சியின் பாரதூரமான நிலைமைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (எ)



# செட்டிக்குளத்தில் தெய்வீக கிராம நிகழ்வு

வவுனியா, நவ. 25

வவுனியா, செட்டிக்குளம் - முகத்தான்குளம் சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் தெய்வீக கிராம நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வெங்கலச்செட்டிக்குள பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய குறித்த நிகழ்வின் ஆன்மீக ஊர்வலமானது கமநல சேவைகள் நிலையத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு ஆலய முன்றலில் முடிவடைந்தது.

இந்த ஊர்வலத்தை தொடர்ந்து விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு நந்தி கொடியேற்றப்பட்டதுடன், பல்வேறு சமய நிகழ்வுகளும் நடைபெற்றன. இதன்போது, பிரதேச அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

(எ-10)

# வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

வவுனியா, நவ. 25

மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

வவுனியா மாநகர சபை முன்றலிலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டு மாநகர சபை கலாசார மண்டபத்தில் உணர்வு பூர்வமாக அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.




இதனைத் தொடர்ந்து மூன்று மாவீரர்களின் தாய் ஒருவரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதுடன் பிரதான திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில், ராஜபக்சக்கள் ஆட்சிபீடமேற எமது மக்கள் இடமளிக்கமாட்டார்கள்!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



கொழும்பு, நவ. 25

**"கடந்த காலங்களில் நாட்டை எப்படி ரணில், ராஜபக்ஷக்கள் சூறையாடினார்கள் என்பது எமது மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, ரணில், ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியமைக்க எமது மக்கள் இடமளிக்கமாட்டார்கள்."**

-இவ்வாறு அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

"போரில் மரணித்த மாவீரர்களைத் தமிழ் மக்கள் நினைவேந்த எமது அரசு எந்தத் தடையும் ஏற்படுத்தவில்லை. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்ற சில மாவீரர் துயிலும் இல்லங்களை இந்த மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன."- என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டைக் குட்டிச் சுவராக்கிய வங்குரோத்து அரசியல்வாதிகள் இணைந்து ஆட்சியைக் கலைக்கப் போவதாகக் கூக்குரல் இட்டு வருகின்றனர்.

நாட்டை 70 வருட காலத்துக்கு மேலாக சீரழித்த வரலாற்றை எமது தேசிய மக்கள் சக்தி அரசு மாற்றி அனைத்து இன மத மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு தாய் நாட்டைக் கட்டியெழுப்பி வருகின்றோம்.

கடந்த காலங்களில் குடும்பமாக நாட்டைச் சூறையாடியவர்கள் துரத்தப்பட்ட நிலையில் நேர்மையான ஓர் அரசியல் கலாசாரத்தை எமது அரசு முன்னெடுத்து வருவதைச் சகித்துக் கொள்ள முடியாத கூட்டம் இனவாதத்தைத் தூண்ட முனைகின்றது.

போரில் மரணித்த மாவீரர்களைத் தமிழ் மக்கள் நினைவேந்த எமது அரசு எந்தத் தடையும் ஏற்படுத்தவில்லை.

கடந்த காலங்களில் நினைவிடங்கள் உடைக்கப்பட்ட, கொடிகள் அறுத்தெறியப்பட்ட வரலாறுகளையும் மாற்றி பூரணமாக நினைவேந்தல் உரிமையை வழங்கியது எமது அரசே.

நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாதுகாப்புத் தரப்பிடம் இருக்கின்ற மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் இந்த மாத இறுதிக்குள் சில துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதேபோல் வடக்கில் காணி விடுவிப்புகள் திட்டமிட்டபடி படிப்படியாக இடம்பெறும். அதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை.

அண்மையில் வன்னி நிலப்பரப்பில் இராணுவத்திடம் இருந்த ஒரு பகுதி காணி விக்கப்பட்ட நிலையில் அதனை உரியவர்களுக்கு வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன்.

எமது அரசு நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காயண்பதற்காகப் புதிய அரசமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றது.

அதைப் பொறுக்க முடியாத சிலர் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்ற நிலையில் அவர்கள் ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நினைப்பில் இருக்கின்றார்கள்.

அண்மையில் திருகோணமலையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களுக்குப் பின்னால் இனவாத சக்திகளின் செயற்பாடுகள் இருக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களின் நோக்கம் மக்களை வாழவைப்பது அல்ல. தமது அரசியல் இருப்புக்களை தக்கவைத்துக் கொண்டு நாட்டைச் சூறையாடுவதே இவர்களின் நோக்கம் - என்றார். (அ)

# பலத்த மழை வீழ்ச்சி காரணாமக நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்கள்!

கொழும்பு, நவ. 25

குருநாகல் மாவட்டத்தின் மஹாஓயா பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் அதிக மழை வீழ்ச்சிப் பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிரிஉல்ல, பொல்கஹவெல, படல்கம போன்ற இடங்களில் சுமார் 100 மி.மீ மழை பெய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நில்வலா ஆற்றின் கீழ்ப் பகுதியில் 50 மி.மீ மற்றும் ஜின் கங்கை, களு கங்கை, களனி, அத்தனகலு ஓயா, யாங் ஓயா, தெதுரு ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய பகுதிகளில் 50-75 மி.மீ. மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

இதனால், பல நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் அதிகமாக இருப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

அதேநேரம் நில்வலா, ஜின் மற்றும் களு கங்கைகள், குடா கங்கைகள், அத்தனகலு ஓயா, மகா ஓயா மற்றும் தெதுரு ஓயா ஆகிய ஆறுகளின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், வரும் நாட்களில் இந்த நீர்த்தேக்கங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்த சில வாரங்களாக ஈர மண்டலத்தில் உள்ள பல ஆற்றுப் படுகைகளில் நீர் மட்டம் அதிகமாக இருப்பதாகவும், இதனால் பல தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய வழக்கமான மழை பெய்தாலும், அந்தப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் அவர் எச்சரித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு சொந்தமான 73 முக்கிய நீர்த்தேக்கங்களில், 9 நீர்த்தேக்கங்களின் நீர் ஏற்கனவே வெளியேற்றப்பட்டு வருவதாகவும், அதே நேரத்தில் தெதுரு ஓயா, ராஜாங்கனை மற்றும் தப்போவ போன்ற நீர்த்தேக்கங்கள் கணிசமான அளவு நீரை வெளியேற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# மீனவ சமூகத்திற்கென புதிய ஓய்வூதிய திட்டம்!

கொழும்பு, நவ. 25

விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையினால் மீனவ சமூகத்திற்காக மீனவர் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காப்புறுதித் திட்டத்தின் மூலம் மீனவ சமூகத்துக்குப் பல விசேட நன்மைகள் கிடைக்கும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக தவணைக் கட்டணங்களைச்செலுத்தி முடித்த பின்னர், 60 வயதிலிருந்து மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

75 வீத தவணைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள சந்தாதாரர்களுக்கு, ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படாமல், அவர்கள் செலுத்திய தொகைக்கு ஏற்ப 60 வயதிலிருந்து மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்

25 வீதம் முதல் 75 வீதம் வரை சந்தா செலுத்தியுள்ள சந்தர்ப்பத்தில், செலுத்திய முழுத் தொகையையும் அதற்கான வட்டியுடன் பெற்றுக்கொள்ளும் வசதி இத்திட்டத்தில் உள்ளது.

அதேநேரம் ஓய்வூதியம் பெறுவதற்கு முன் பகுதி ஊனம் ஏற்பட்டால் பணிக்கொடை அல்லது ஓய்வூதியம் வழங்கும் நேரத்தில் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறும் வசதி உண்டு.

நிரந்தர ஊனம் ஏற்பட்டால் அதிகபட்சம் 50,000 ரூபா வரை பணிக்கொடையை ஒரே தடவையிலோ அல்லது தவணை முறையிலோ பெற்றுக்கொள்ளலாம்.

ஓய்வூதியம் பெறுவதற்கு முன் விபத்து காரணமாக உயிரிழந்தால், ஒரு வருடத்தின் பின்னர் வாரிசுதாரருக்கு முழு சந்தாத் தொகையும் அதற்கான வட்டியுடன் வழங்கப்படும்.

தவணைக் கட்டணம் செலுத்தத் தவறிய சந்தர்ப்பங்களில், நிலுவைத் தொகையையும் வட்டியையும் செலுத்தி காப்புறுதிப் பத்திரத்தை மீண்டும் செல்லுபடியாக்கிப் கொள்ளலாம்.

ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் போது சந்தாதாரர் உயிரிழந்தால், அவருக்கு 80 வயது பூர்த்தியாகும் காலம் வரை அவரது வாழ்க்கைத் துணைக்கு (கணவன்/மனைவி) மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும் அல்லது மீதமுள்ள தொகையை ஒரே தடவையில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த மீனவர் ஓய்வூதியத் திட்டம் அமைச்சர் லால் காந்த தலைமையில் கடந்த 22 ஆம் திகதி கொழும்பு தாமரை கோபுர வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் பெயர் பலகை அகற்றம்: பின்னணியில் அரசியல் தேவை உள்ளது

## புத்தசாசன அமைச்சர் சொல்கிறார்

மட்டக்களப்பு, நவ. 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் தொல்பொருட்கள் காணப்படும் இடங்களை அடையாளப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பெயர் பலகைகள் அகற்றப்பட்ட பின்னணியில் அரசியல் தேவையே இருப்பதாக புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தால் குறித்த பெயர் பலகைகள் மற்றும் திசைகாட்டிகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றை சிலர் அகற்றிய காணொலிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் துறை சார்ந்து ஒருவித அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. நீண்ட காலமாகவே தொல்பொருள் திணைக்களம், புராதன சின்னங்கள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தி, அந்த இடங்களுக்குச் செல்வதற்கான திசைகாட்டிகள் மற்றும் பெயர் பலகைகளை நிறுவி வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான பெயர் பலகைகளை அமைக்கும் பணிகள் இவ்வருடம் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன. இது பொதுவாக திணைக்களம் முன்னெடுத்து வரும் ஒரு சாதாரண செயல்பாடாகும்.

இது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் ஒன்றோ அல்லது புதிய குழப்ப நிலையோ அல்ல. அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்குப் பொறுப்பான எமது உதவிப் பணிப்பாளர் இதில் தலையிட்டுள்ளார்.

ஆனால், அரசாங்கத்துக்குச் சொந்தமான, சட்டரீதியாக நிறுவப்பட்ட இந்த பெயர் பலகைகளை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு அகற்றி, அவற்றை அங்கிருந்து எடுத்துச் சென்றுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. நான்கு இடங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தொல்பொருள் திணைக்களம் இது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளது. வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும் பட்டிப்பளை - கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நான் இது குறித்து தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். அவர் உரிய நடவடிக்கைகளை எடுத்து அறிக்கைகளை கோரியுள்ளார்.

இதேபோல பொலிஸ் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளார். அமைச்சர் ஆனந்த விஜேபால இது குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு, இச்சம்பவத்துக்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸாருக்கு உடனடியாகப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏனெனில் தொல்பொருள் மற்றும் வரலாற்றுப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அப்பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த பெயர் பலகைகளை நிறுவுவதற்குப் பிரதேச உள்ளூராட்சி மன்றங்களிடம் எந்தவித அனுமதியும் பெறத் தேவையில்லை என திணைக்களம் எனக்குத் தெரியப்படுத்தியுள்ளது. இது நீண்ட காலமாக முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடு.

இதன் பின்னணியில் அரசியல் நோக்கம் ஒன்று இருப்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இது அப்பாவி மக்களுக்கோ அல்லது மாகாணத்தில் வசிக்கும் குடிமக்களுக்கோ தேவையான ஒன்றல்ல.

இதனை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளது. எனவே, இவ்வாறான செயல்பாடுகளிலிருந்து தயவுசெய்து விலகியிருக்குமாறு நாம் மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசாங்கம் இது தொடர்பில் மிகவும் முறைப்படியும், வேகமாகவும் செயல்படும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸாரால் முடியும் என நான் கருதுகிறேன்.

அதுவரை பொதுமக்கள் எவரும் பதற்றமடையத் தேவையில்லை என நான் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்". - என்றார். (எ)

# திருமலை முதல் காங்கேசன் வரை கடல் கொந்தளிப்பாக காணப்படும்

கொழும்பு, நவ. 25

திருகோணமலை தொடக்கம் காங்கேசன்துறை, மன்னார், சிலாபம் வரையான கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாக காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் தாழ் மட்டத்தில் தென்படுகின்ற தளம்பல் நிலையானது இன்று ஒரு தாழமுக்கப் பிரதேசமாக விருத்தியடையும்.

இதன் காரணமாக நாடு முழுவதிலும் நிலவுகின்ற மழையுடனான வானிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு தொடரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானம் முகில் செறிந்து காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பிராந்தியங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

திருகோணமலை தொடக்கம் காங்கேசன்துறை, மன்னார் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோ மீற்றர் வேகத்திலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# குச்சவெளியில் காயங்களுடன் சடலம் மீட்பு!

திருகோணமலை, நவ. 25

திருகோணமலை, குச்சவெளி பகுதியில் அடையாளம் தெரியாத ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குச்சவெளி பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக காயங்களுடன் ஒருவர் விழுந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து, குறித்த நபரை நிலாவெளி மருத்துவமனையில் அனுமதித்தபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

47 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும் 5 அடி, 4 அங்குலம் உயரமுடையவர் எனவும் மெலிந்த உடல் அமைப்பு கொண்டவர் என பொலிஸார் கூறினர்.

வலது காலில் காயம் ஏற்பட்ட அடையாளம், காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பேருந்து - கார் மோதியதில் இருவர் மருத்துவமனையில்

ஹற்றன், நவ. 25

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதி, ரொசெல்லா பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்து வட்டவளை பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹற்றனில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கார், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் கொழும்பிலிருந்து ஹற்றன் வழியாக ராவணகொட நோக்கிச் சென்ற இ. போ. ச. பேருந்துடன் மோதியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இருவரின் நிலையும் மோசமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# "அம்பாறையில் அபிவிருத்தி பணிகளுக்கு வேறு யாரும் உரிமை கோர முடியாது"

சாய்ந்தமருது, நவ. 25

அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் அனைத்தும் எமது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு வேறு யாரும் உரிமை கோர முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது தோணாவை சுத்தம் செய்து, அபிவிருத்தி செய்யும் பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா நேற்று முன்தினம் பார்வையிட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

எமது அரசின் மூலமாக அம்பாறை மாவட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு, நிறைவுபடுத்தப்பட்டும் வருகின்றன. ஒவ்வொரு நாளும் வேலைத்திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, அபிவிருத்தி கண்டு வருகின்றது.

சுமார் 17 கோடி ரூபாயை தோணா அபிவிருத்திக்காக கடந்த காலங்களில் செலவிடப்பட்டதாக பொதுமக்கள் கூறுகின்றனர். இருந்தாலும் இந்த நிதியின் மூலமாக குறித்த மக்கள் பயனடைந்திருக்கின்றார்களா என்றால், அது கேள்விக்குறியாக இருக்கின்றது.

இப்போது ஒதுக்கப்பட்டுள்ள 3. 2 மில்லியன் ரூபாய் பணத்தை கொண்டு இந்தத் தோணாவை முழுமையாக அபிவிருத்தி செய்கின்ற பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் திறைசேரியிலே அதிகளவான பணம் இருக்கின்றது.

அதேபோன்று மக்களுடைய வரிப்பணம் மிகப்பிரயோசனமாக மக்களுக்கே சென்றடைய வேண்டும். இதனை எமது அரசாங்கம் ஒரு கொள்கையாக கொண்டிருக்கின்றது. - என்றார்.

# தலைக்கவசம் அணிய பெற்றோர்கள் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்

## காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி

காரைதீவு, நவ. 25

வீட்டிலிருந்து புறப்படும் போது தலைக்கவசம் அணிவதற்கு முதலில் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் தேவையற்ற உயிரிழப்புகளை தவிர்க்க முடியும் என்று காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ. பி.ஜயரத்ன தெரிவித்தார் .

காரைதீவு பொலிஸ் நிலையத்துக்கான ஆலோசனை குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் விசேட ஏற்பாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை இப்பிரதேசத்திலும் நாங்கள் மும்முரமாக முன்னெடுப்போம். அதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு கட்டாயம் தேவை.

நாங்கள் இங்கு இருப்பது பொது மக்களின் சட்டம் ஒழுங்கு பாதுகாப்புக்காக.

ஆகவே, எங்களை நீங்கள் பூரணமாக பயன்படுத்த வேண்டும். தலைக்கவசம் இல்லாமல் சென்று சம்பவித்த விபத்துக்களைப் பற்றி தினம் தினம் அறிகிறோம்.

நாங்கள் முன்மாதிரியாக செயல்படும் பட்சத்தில் எமது சேவையை நாடி மக்கள் வருவார்கள்.

உங்களின் ஒத்துழைப்பு பெரிதும் தேவையாகிறது. -என்றார். (எ-08)

# மட்டு. பாசிக்குடா கடலில் நீராட சென்றவர் மாயம்

மட்டக்களப்பு, நவ. 25

கல்குடா - பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற ஒருவர் காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்குடா - பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீரில் அடித்து செல்லப்பட்டவர் பொலநறுவை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போன நபரைத் தேடும் பணியில் பொலிஸ் உயிர் காப்பாளர்கள், கடற்படை உயிர் காப்பாளர்கள் மற்றும் பிரதேச வாசிகள் ஈடுபட்டுள்ளனர்.

கல்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

உறுதிப்படுத்துவதற்காக எமது அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முரணாக அமைந்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கனேடிய தூதுவர், கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாகவே இருப்பதாகவும் அந்த அமைப்புடனோ அல்லது பிரிவினைவாத கொள்கைகளுடனோ தொடர்புடைய சின்னங்களை கனேடிய கூட்டாட்சி அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் இறையாண்மைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் கனடா தொடர்ந்தும் மதிப்பளித்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## நுகேகொடை...

அஞ்சியே தமது சில சகாக்களை அழைத்துக் கொண்டு அவர்கள் கொழும்பு வந்துள்ளனர். இந்த கூட்டம் அரசுக்கு சவால் அல்ல. அது செல்லாக்காசு போராட்டம்." எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## அரச எதிர்ப்பு...

உரையாற்றும்போது அருகில் கழுத்துப் பை ஒன்றைத் தாங்கியபடி, கைத்துப்பாக்கி ஒன்றைச் சுடுவதற்குத் தயார்நிலையில் வைத்திருக்கும் பாணியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதித் லொக்கு பண்டார நின்றுகொண்டிருந்தமை சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியுள்ளது.

தற்போது சுதந்திரக்கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தும் உதித் லொக்குபண்டார அப்படி இருந்தது ஏன்? அவர் நாமல் ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கினாரா? அல்லது தற்பாதுகாப்புக்காக அப்படிச் செயற்பட்டாரா என்ற கோணங்களில் நோக்கப்படுவதால் இது பற்றிய விசாரணைகளை நடத்தத் தீர்மானித்திருக்கும் பாதுகாப்பு அமைச்சு, இது தொடர்பில் அறிக்கையொன்றை நுகேகொடை பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உதித் லொக்குபண்டார மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடம் வாக்குமூலம் பெறவும் பொலிஸ் தயாராகி வருகிறது.

உதித் வைத்திருந்த கைத்துப்பாக்கி சிலவேளை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்ட ஒன்றாக இருந்தாலும் அதனை பொதுவெளியில் அப்படி வைத்திருக்கலாமா? இது அச்சமூட்டும் செயற்பாடாக அமையாதா? என்ற கோணங்களிலும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக தெரிகிறது.

எவ்வாறாயினும், இந்தக் கைத்துப்பாக்கி ஏந்திய விவகாரத்தை நாமல் ராஜபக்ஷ அறிந்திருக்கவில்லையென பொதுஜன பெரமுன வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## வடக்கு...

அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து வீடமைப்பு மற்றும் நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பில் ஆராய்ந்தேன். யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் மீள்குடியேற்றத் திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் முழுமைப்பெறவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மீள்குடியேற்றத்துக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்தாண்டு 2500 வீடுகள் நிர்மாணிக்கப்படும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் நிலவும் மீள்குடியேற்ற பிரச்னைக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும்-என்றார். (அ)

## வடக்கு அனர்த்த...

கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி நகர்ந்து நாளை ஒன்றாக இணைந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுப்பெற்று தெற்கு நோக்கி, ஆரம்பத்தில் முழுவதும் இலங்கை நிலப்பகுதியூடாக நகர்ந்து பின்னர் இலங்கையின் கிழக்கு கரையில் அரைவாசிப்பகுதி நிலப்பகுதியிலும் அரைவாசிப்பகுதி கடற்பகுதியுமாக நகர்ந்து நாளை மறுதினம் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று தொடர்ந்து கிழக்கு கரையோரமாக நகர்ந்து வடக்கு மாகாணத்தினை அண்மித்து, எதிர்வரும் 30 ஆம் திகதி வடமாகாணத்தில் இருந்து நீங்கி மேலும் வடக்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் நாளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதே வேளை நாளை முதல் 29ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அத்துடன் மேற்கு, தெற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை முதல் கிழக்கு தெற்கு, மேற்கு, மத்திய, சபரகமுவா மற்றும் ஊவா மாகாணங்களில் காற்று மணிக்கு 50-70 கி.மீ. வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை நாளை மறுதினம் முதல் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50-70 கி.மீ. வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்கு, மேற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா மாகாணத்தில் ஏற்கனவே பல ஆறுகள் அவற்றின் கொள்ளளவை தாண்டி பாய்ந்து கொண்டிருக்கின்றன. பல இடங்களில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை மிகப்பெரும் கன மழை எதிர்வரும் நாட்களிலும் கிடைக்கவுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கிடைத்து வருகின்ற கன மழை காரணமாக நிலம் நிரம்பியுள்ளது. அதேவேளை மிகப்பெரும் கன மழை எதிர்வரும் நாட்களிலும் கிடைக்கவுள்ளன -என்றார். (அ)

## மோசமான...

மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.

கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும், 193 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஏதேனும் பேரிடர் அல்லது வானிலை தொடர்பான அவசரநிலை ஏற்பட்டால் 117 என்ற துரித இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நாடு முழுவதும் நிலவும் மழையுடனான வானிலை அடுத்த சில நாள்களுக்கு தொடரும் என்றும் வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## ரில்வின்...

குழுவின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலையில் புதிய புத்தர் சிலை விடயம் மற்றும் சிங்கள குடியேற்றங்களை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. லண்டன், வெம்பிளியில் புலம் பெயர் தமிழர் அமைப்பினால், இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான தமிழர்கள் ஒன்று கூடி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் மற்றும் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை போன்றவற்றுக்கு மூல காரணமாக ரில்வின் சில்வா செயற்பட்டார் என புலம்பெயர் தமிழர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிடுள்ள ரில்வின் சில்வா, நேற்று முன் தினம் பிற்பகலில், லண்டன் - அல்பேட்டன் பகுதியில் உள்ள கட்டடத்தில் புலம்பெயர் இலங்கையர்களுடன் கலந்துரையாடினார்.

அதற்காக அவர் பயணித்த வாகனத்தை மறித்தே புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

எனினும் லண்டன் பொலிசார் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தி, ரில்வின் சில்வாவின் வாகனம் செல்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்ததாக லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அரசுக்கு...

நடவடிக்கையை முன்னெடுப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான ஒரு குறிப்பிட்ட காலவரையறையுடன் கூடிய தீர்வுத் திட்டத்தை அறிவிப்பதன் மூலம், தற்போது சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்க்க உடனடியாகத் தலையிட வேண்டும் எனத் தமது சங்கம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஹேமசிறி...

உளவுத்துறை கிடைத்திருந்தும் தடுக்கத் தவறியதாக குறிப்பிட்டு சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

எனினும், விசாரணைக்கு இன்னும் முறையாக ஒரு அமர்வு நியமிக்கப்படாததால், வழக்கு 2026 ஜனவரி 26 அன்று மீண்டும் விசாரணைக்கு வரும் என்று நீதிமன்ற பதிவாளர் அறிவித்தார்.

முன்னதாக, மூன்று நீதிபதிகள் கொண்ட மேல் நீதிமன்ற அமர்வு, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோரை நிரபராதிகள் என்று அறிவித்து, பிரதிவாதிகளிடமிருந்து ஆதாரங்களை கோராமல் விடுதலை செய்தது.

சட்டமா அதிபர் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தார்.

மேலும் இரண்டு பிரதிவாதிகளையும் விடுவித்த மேல் நீதிமன்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது.

பின்னர் மேல் நீதிமன்றம், வழக்கை மீண்டும் விசாரிக்கவும், பிரதிவாதிகளிடமிருந்து சாட்சியங்களை சேகரிக்கவும், அதன் பிறகு புதிய தீர்ப்பை வழங்கவும் உயர் நீதிமன்ற விசாரணை அமர்வுக்கு உத்தரவிட்டது. (அ)

## ரணில்...

விசாரணையின் ஒரு பகுதியாக பிரித்தானியாவில் தற்போதுள்ள பொலிஸ் குழு, லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் நான்கு ஊழியர்களிடமும் இந்த வாரம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

இந்தக் குழு இன்று இலங்கைக்குத் திரும்பவுள்ளதுடன், நாடு திரும்பியவுடன் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்று சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்கவை சந்தித்து, தமது சேவைப்பெறுநர் மீதான விசாரணையின் முன்னேற்றம் குறித்து விசாரித்தது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் குழு பிரித்தானியாவிலிருந்து திரும்பிய பின்னரே விசாரணையின் முன்னேற்றம் குறித்து மேலும் தெளிவுபடுத்த முடியும் என்று சட்டமா அதிபர் அவர்களிடம் தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (அ)

## வடக்கு எதிர்கொள்ள...

மற்றும் எதிர்கொள்வது தொடர்பான அவசர முன்னாயத்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா, தற்போதைய வானிலைச் சூழல் குறித்து விரிவான விளக்கமளித்தார்.

“இரு காற்றுச் சுழற்சிகள் ஒன்றிணைந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறி, இலங்கை ஊடாக நகர்ந்து செல்லும் நிகழ்வானது கடந்த 130 ஆண்டுகளில் இப்போதுதான் நிகழ்கின்றது. இது ஓர் அபூர்வமான மற்றும் ஆபத்தான வானிலை நிகழ்வாகும். இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் மிகக் கனமழையும், பலத்த காற்றும் வீசக் கூடும்“ என அவர் எச்சரித்தார்.

மேலும், ஏற்கனவே பெய்த மழையால் மண் ஈரமாகியுள்ளதால், பலத்த காற்று வீசும் போது மரங்கள் வேரோடு சாய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், கடல் நீர்மட்டம் இந்தக் காலப்பகுதியில் உயர்வாக இருக்குமென்பதால் வெள்ள நீர் வடிந்தோட முடியாத சூழல் காணப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் இடையூறின்றி நடைபெற்று வருகின்றன. இடர் நிலைமை ஏற்பட்டால் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இதன்போது, பரீட்சை நிலையங்கள் இல்லாத பாடசாலைகளையும், பொது மண்டபங்களையும் இடம்பெயரும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களாகப் பயன்படுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாணத்தின் பராமரிப்பிலுள்ள 54 குளங்களில் 52 குளங்களின் நீர்மட்டம் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. 300 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்தால் மட்டுமே வான்பாயும் நிலை ஏற்படும் என மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார். இதேநேரம் கடல் நீர்மட்டம் இன்னமும் உயர்வடையாமையர், யாழ். மாவட்டத்தின் 3 தடுப்பணைகளும் திறக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் தீவகப் பகுதிகளில் நோயாளர்களைக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட சவால்களைச் சுட்டிக்காட்டிய மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர், கடற்படை மற்றும் விமானப்படையின் உதவியுடன் அவசர மருத்துவச் சேவைகளை உறுதிப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடல் நீர்மட்டம் உயர்வதற்கு முன்னதாகவே, உள்ளூராட்சி மன்றங்கள் வாய்க்கால்களைத் துப்புரவு செய்து, தேங்கியுள்ள வெள்ள நீரை விரைவாக வெளியேற்ற வேண்டும். அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான நிதியை விடுவிக்குமாறு பிரதிப் பிரதம செயலாளருக்கு (நிதி) ஆளுநர் பணித்தார்.

மீட்புப் பணிகளுக்காக முப்படையினர் தயார் நிலையிலுள்ளதாகத் தெரிவித்தனர்.

இடர் காலத்தில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் 24 மணி நேரமும் மக்களுக்கு உதவும் வகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல், நிதி), முப்படைப் பிரதிநிதிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நீண்ட காலத் தடுப்புக் காவலுக்கு விரைவில் வருகிறது புதிய சட்டம்!

## அடுத்த மாதம் சமர்ப்பிக்க அரசு திட்டம்

கொழும்பு, நவ. 25

**தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு உறுப்பினர்கள் தொடர்பில் குற்றப்பத்திரங்களை சமர்ப்பிக்கவும், நீண்ட காலம் தடுத்து வைப்பதற்குமான புதிய சட்டமூலத்தை சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகியுள்ளது.**

அதன்படி புதிய சட்டமூலத்தை அடுத்த மாதம் அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக அமையாது.

எனினும், நீண்ட காலமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை வழங்கும் வகையில் புதிய சட்டமூலம் அமையவுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர்களை நீண்டகாலம் தடுப்புக் காவலில் விசாரணை செய்யும் வகையில் புதிய சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (அ)

# கிழக்கில் பெயர்ப்பலகைகளை அகற்றியோர் விரைவில் கைது!

## அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவிப்பு



கொழும்பு, நவ. 25

கோறளைப்பற்று பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட கிராமங்களில் தொல்பொருள் திணைக்களத்தினால் நடப்பட்ட பெயர்ப்பலகைகளை அகற்றியோர் கைது செய்யப்படுவார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சற்றுமுன்னர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சட்டம் அனைவருக்கும் சமம் என்றும் சட்டத்தை கையிலெடுத்து இந்த செயற்பாட்டில் ஈடுபட்டோர் மீது நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கோறளைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் தொல்பொருள் இடம் என்ற பெயர்ப் பலகைகளை கடந்த சனிக்கிழமை மாலை பிரதேச சபை தவிசாளர் உட்பட்ட குழுவினர் மற்றும் பொது மக்கள் இணைந்து அகற்றும் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கிரான் பிரதேசத்தில் குடும்பிமலை உட்பட்ட மலை பிரதேசங்கள் பழமை வாய்ந்த ஆலயங்கள் வயல்வெளிகள் போன்ற இடங்களில் காணப்படும் மக்கள் போக்குவரத்து செய்யும் வீதியில் உள்ள சந்திகளில் இப் பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக பிரதேச மக்கள், சமூக ஆர்வலர்கள் பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சுதாகரனிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் தவிசாளர், உபதவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் இணைந்து அவற்றினை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் பாராளுமன்றில் கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜேபால வடக்கு, கிழக்குக்கும் தெற்குக்கும் ஒரே சட்டம் தான். அதனை எவரும் மீறக்கூடாது. ஏற்கனவே பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# 43,703 பயனாளிகளுக்கு வங்கிக்கணக்கு இல்லாதமையால் "அஸ்வெசும" இல்லை!

கொழும்பு, நவ. 25

"அஸ்வெசும" நலன்புரித் திட்டத்தின் கீழ் உள்ள 43,703 பயனாளிகளுக்கு வங்கிக் கணக்குகள் இல்லாத காரணத்தினால், அவர்களுக்கான சலுகைகள் கடந்த 2024 ஆம் ஆண்டில் கிடைக்கவில்லை என்பது தெரியவந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இதனால், தகுதியுடைய பயனாளிகளுக்குக் குறித்த சலுகைகள் கிடைக்காமல் போக அல்லது இழக்க நேரிடும் என்று கணக்காய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்காக, நலன்புரி நன்மைகள் சபை 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதி வரையிலும் பொருத்தமான ஒரு பொறிமுறையை நிறுவி செயற்படுத்தவில்லை என்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின்படி தகுதியான நபர்களுக்கு சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கணக்காய்வு அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்குகளைத் திறக்காத பயனாளிகளுக்குக் கணக்குகளைத் திறக்குமாறு தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும" திட்ட விதிகளுக்கு அமைய, தகுதியுடைய நபர்களுக்குப் பலன்களை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கணக்காய்வு பரிந்துரை செய்துள்ளது.

இந்தத் தகவல், நலன்புரிச் நன்மைகள் சபை தொடர்பான 2024 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிலிட்டி மீனவர்களின் வலைகள் இந்திய இழுவை படகுகளால் நாசம்!

## ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் சேதம்

யாழ்ப்பாணம், நவ. 25

இந்திய இழுவைப் படகுகளால் யாழ்ப்பாணம் - மயிலிட்டி மீனவர்களின் ஒரு கோடி ரூபா பெறுமதியான தொழில் முதல்கள் நாசம் செய்யப்பட்டுள்ளதாக மயிலிட்டி கடற்றொழில் சங்கத்தின் தலைவர் குணரத்தினம் குணராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றிரவு (நேற்று முன்தினம்) 10.00 மணியளவில் நூற் றிற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் எமது மயிலிட்டி கடற்கரையில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர்களுக்குள் உள்நுழைந்து அட்டகாசம் செய்துள்ளன.

இதனால் 20 மீனவர்களின், சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வலைகள் உள்ளிட்ட தொழில் முதல்கள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனுக்கு இன்று (நேற்று) காலை தெரியப்படுத்தினோம். அவர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். இந்திய மீனவர்களின் இந்த அட்டகாசத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எத்தனை ஆண்டுகள் தேவை? வாய் பேச்சுக்கு மட்டும் நடவடிக்கை எடுப்பதாக கூறினால் போதுமா? தொழில் முதல்களை இழந்த மீனவர்கள் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுவதற்கு வழி தெரியாமல் தவிக்கின்றனர். இந்த விடயம் அரசாங்கத்துக்கு தெரியுமா? நாங்கள் பல்வேறு பிரச்னைகளின் மத்தியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். இந்நிலையில் எமது தொழில் முதல்களை இவ்வாறு தொடர்ச்சியாக அழித்து வந்தால் நாங்கள் என்ன செய்வது?

சட்டவிரோதமாக அத்து மீறி நுழைபவர்களை கட்டு ப்படுத்துவதற்கு ஏன் ஒரு தீர்க்கமான நடவடிக்கையை அரசினால் எடுக்க முடியவில்லை? தயவு செய்து இனியாவது எமது மீனவர்களின் நிலையை அறிந்து விரைவாக ஒரு நிரந்தர நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்-என்றார். (அ-05)

# இந்தியக் குடியுரிமை கோரிய இலங்கைத் தமிழ்க் குடும்பம்!

## 2 மாதத்தில் முடிவு எடுக்க நீதிமன்றம் உத்தரவு

சென்னை, நவ. 25

திருச்சி, கொட்டப்பட்டு மறுவாழ்வு முகாமில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது குறித்து இரண்டு மாதங்களுக்குள் பரிசீலிக்குமாறு மத்திய உள்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சுகளுக்கு மதுரை மேல் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் எனக் கோரி நபர் ஒருவர் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவை விசாரித்த நீதிபதி பி.டி. ஆஷா இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நபர் தனது மனுவில், தான் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு இலங்கையில் பிறந்தவர் என்றும், அவரது மூதாதையர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இலங்கைக்கு இடம்பெயர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியக் குடியுரிமை வழங்குமாறு கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2020 ஜூலை 20 அன்று ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்தபோதிலும், அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

எனவே, அதிகாரிகள் அவர்களைத் தாயகம் திரும்பியவர்களாக அங்கீகரித்து நிவாரணம் வழங்க உத்தரவிடக் கோரி அவர் நீதிமன்றத்தை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்கி அட்டைகள் மூலம் பஸ் ரிக்கெற் கொடுப்பனவு முறை நேற்று ஆரம்பம்!



கொழும்பு, நவ. 25

பஸ் ரிக்கெற் கொடுப்பனவை வங்கி அட்டை மூலம் செலுத்தும் முன்னோடித் திட்டம், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில், மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தில் நேற்று ஆரம்பமானது.

நாட்டின் பொதுப் போக்குவரத்து அமைப்பை நவீனமயமாக்குவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இந்த முயற்சி டிஜிற்றல் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சினால் கூட்டாக செயல்படுத்தப்படுகிறது.

புதிய முறை பயணிகள் வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி பஸ் ரிக்கெற்றுகளை வாங்க முடியும்.

இதனால் பண பரிவர்த்தனைகளுக்கான தேவை குறைகிறது. (அ)

# யால சரணாலய பகுதியில் கஞ்சா தோட்டம் முற்றுகை!

கொழும்பு, நவ. 25

யால சரணாலய பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பெரிய அளவிலான மூன்று கஞ்சா சாகுபடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த இடத்திலிருந்து 200,000 இற்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளும் 50 கிலோ கிராம்களுக்கும் அதிகமான உலர்ந்த கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசேட சோதனை நடவடிக்கையின்போது மூன்று கஞ்சா தோட்டங்களையும் பொலிஸார் தீயிட்டு அளித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org